சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் :11.03.2025

வா.சா.1 – உமாதேவி W/o தியாகராஜன்

O.S No. 268/2022:

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். காத்தானும், நானும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் என்றால் சரியல்ல, அவர் ஒட்டக்கோவில்பட்டியை சார்ந்தவர், நான் கம்பூரை சார்ந்தவர். காத்தான் என்னுடைய உறவினர என்றால் பழக்கம் ஆவார். உறவினர் அல்ல, இருவரும் ஒரே சமூகத்தினர். காத்தான் என்னுடைய தூரத்து உறவினர் என்றும் அதை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வீடு இருக்கிறது. 25.09.2019 அன்று வழக்கு சொத்தை பொறுத்து ரூபாய் 3,65,000த்தை பெற்றுக்கொண்டு நிபந்தனை கிரைய பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. ரூபாய் 2,30,000 கடனாக வாங்கியிருந்தோம். வா.சா.ஆ.2 நிபந்ததை கிரைய பத்திரத்தில் கிரைய தொகையாக ரூபாய் 3,65,000 எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே 70000ரூபாய் கடனாக பெற்றோம். அதற்கு சொத்து எழுதி கேட்டார்கள். அப்போது சொத்து கைவசம் இல்லை, வீடு மட்டும் தான் இருந்தது, அதுவும் equitas பைனான்சில் அடமான தொகை 1,60,000ரூபாய் இருந்தது, அதை காத்தான் செலுத்தி மீட்டு வந்து 3,65,000ரூபாய்க்கு நிபந்தனை கிரைய பத்திரம் எழுதி கொண்டார். மேற்படி நிபந்தனை கிரைய பத்திரத்தில் மேற்படி விபரம் கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்குரையில்

7வது பத்தியில் 3,65,000 என்று எழுத்துக்களால் எழுதப்பட்டு அது பின்னால் திருத்தப்பட்டு 2,70,000 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல 2,30,000ரூபாய் வாங்கவில்லை என்றும், 365,000ரூபாய் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல அவர்கள் வட்டியெல்லாம் சேர்த்து 365,000ரூபாய் என்று போட்டுக்கொண்டார்கள். வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி வழக்கு சொத்தின் சுவாதீனம் காத்தானிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். 3 ஆண்டுகளில் பணம் செலுத்தி சுவாதினத்தை எடுத்துகொள்வதாக பேசப்பட்டது. வழக்கு சொத்தின் சுவாதீனம் காத்தான் வசம் இருக்கிறது என்றால் இல்லை என்னிடம் தான் உள்ளது. 2,30,000ரூபாய்க்கு வட்டி எதுவும் பேசிக்கொள்ளவில்லை. நான் வட்டிக்கொடுப்பதாக தான் பேசினேன் என்றும் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதலில் 70,000ரூபாய் கடனாக பெற்றேன். அதன்பிறகு வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தும்போது 10000ரூபாய் கொடுத்தார்கள் அதன்பிறகு Equitas பைனான்சில் திருப்பிய தொகை ரூபாய் 1,60,000 கட்டி பத்திரத்தை காத்தான் திருப்பினார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 3 ஆண்டுகளுக்குள் பணத்தை செலுத்தி சொத்தை மீட்டுகொள்ளலாம் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. அவ்வாறு பணம் செலுத்த தவறும் பட்சத்தில காத்தான் சொத்தின் சுவாதீனத்தை எடுத்து அவருக்கு சொத்து பாத்தியப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதலில் நாங்கள் பணத்தை கொண்டுபோய் 2 ஆண்டுகளில் கொடுக்கும் போது காத்தான் தரப்பில் வாங்க மறுத்து சொத்தில் இருந்து வெளியேறி கொள்ளுமாறு கூறிவிட்டார்கள் மேற்படி விபரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

(மேலும் சாட்சி விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.03.11 18:56:53 +0530

Sub Judge

Melur